செ.வெ.எண் -04 நாள்:02.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஜனவரி -22ஆம் தேதி முதல் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்,நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.பூர்த்தி செய்யபட்ட விண்ணப்பங்களை பயிற்சி ஒட்டுநர் உரிமம் (டு.டு.சு) மற்றும் வயதுச் சான்றுடன் தொடர்புடைய அலுவலகங்களில் அளிக்க கடைசி நாள்.05.02.2018 ஆகும். பயிற்சி ஒட்டுநர் உரிமம் பெற்று விண்ணப்பிப்பவர் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டால் மானியத் தொகை வழங்கப்படுவதற்கு முன்னர் ஒட்டுநர் உரிமம் பெற்று மானியத் தொகைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தால் போதுமானது.இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.